**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the **Morning Star** to:-
**The Manager,**
" Morning Star ",
Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J29/News/85*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 146 JAFFNA, FRIDAY, 14th MARCH, 1986 No. 11

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

***Subscription***
Inland : Rs. 50/- per year

FOR ADVERTISEMENTS
*Apply to :*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai

REFERENCE LIBRARY 17/3

### Opening of the Study Cum Dining Hall at Pandaterruppu

The Study Cum-Dining Hall at Harriet Winslow home erected at a cost of more than four lakhs of rupees was formally opened by Rt Rev D J. Ambalavanar at 3 30 p m on Friday the 6th instant.

At the public meeting which followed the opening ceremony a welcome speech was given by one of the girls of the Home. She thanked the Diocese for all the good things they were doing for the lowly and the lost.

Rt. Rev D. J. Ambalavanar, Mr. A. Kadirgamar and Mr S Ratnavel explained the traditions of the American Ceylon Mission and said that the charity institutions were a continuation of the noble work started by the Missionaries.

*Pulavar S. Velmurugan* spoke on behalf of the Public of Pandaterruppu. He said that the services rendered by the Diocese was greatly appreciated by the people of Pandaterruppu.

### "Hoodoo" Over the St. John's — Jaffna College Cricket Match Lifted After a Lapse of Twenty-two Years

The cricket fixture between St. John's College and Jaffna College this year played on the Bicknell grounds on Monday 24th as a limited 50 over match was a most interesting one in historical perspective. Jaffna College won the match convincingly with two wickets and two overs in hand. St. John's College was all out in 48 overs scoring 148 runs, while Jaffna College scored 150 runs in 48 overs for eight wickets winning the game.

There was a peculiar hoodoo' over only the cricket matches with St. John's College only for a period of 22 years. There was no such mysterious "spell" over all other games with St. John's and over all games including cricket with all the other colleges. The previous victory for Jaffna College with St. John's was in 1962 when Jaffna College won by eight wickets under the captaincy of N A. Sripathmarajah.

Jaffna College which is a co-educational school has performed very creditably in all the first team games, very often remaining unbeaten playing with the all-boys schools. It is all the more creditable now when the percentage of girls has risen to a new high of 36% The Jaffna College teams have to face many schools which have an enrolment of boys of four or five times its own number of boys In spite of it, it has maintained its own in cricket, soccer, hockey and tennis.

The alumni of both these schools will be more than interested in the results of the last cricket match.

*39th Annual Meeting of the Diocesan Council ( C. S. I.)*

### Bishop's Charge

Before commencing his 'Charge' to the Diocese, the Bishop singled out for special mention, three of those listed for Votes of Condolence in the agenda — *Bishop Michael Hollis, the Rev. Max Harrison* and *Mr. I. P. Thurairatnam.*

About *Bishop Michael Hollis,* it was said that humanly speaking if there was inauguration of the Church of South India in 1947, it was Bishop Michael Hollis of the CIPBC, then Anglican Bishop of Madras, whose single vote tilted the Anglican Churches in India in favour of Church Union. In the annals of the CSI, Bishop Hollis will always be remembered for 'the single majority' he constituted in an epoch-making Church decision.

*Rev. Max Hunter Harrison* as an American Missionary at Jaffna College and later as Principal of the United Theological College Bangalore, spent a large part of his missionary career in Asia. He kept his association with his friends and associates in Sri Lanka and India very much alive till his death last month at the age of 90.

*Mr. I. P. Thurairatnam,* as lay leader for well nigh half a century had made a rich contribution to the mission and the diocese, particularly in the area of finance, and administration He died on the 27th April, 1985.

The Bishop based his *Charge* on Book of Isaiah, Chapter 43, Verses 18 and 19:—

> "Remember not the former things, neither the things of old. Behold I will do a new thing. Now it shall spring forth: Shall ye not know it. I will even make a way in the wilderness and rivers in the desert."

These words were addressed by the prophet to the Israelities who were taken as captives to Babylon They were a people who looked for freedom from the captivity.

The prophet exhorted them to cease broading over the things of the past but to have before them a vision of the future. It was Jonathan Swift who said that vision is the art of seeing things invisible. T. S. Eliot put the idea in more subtle language when he said "Redeem the vision in the highest dream".

In Chapter 61 ( verse 1 ) of Isaiah we find these words:—

> "The Spirit of the Lord is upon me because the Lord has anointed me to preach good tidings unto the weak: he had sent me to bind up the broken hearted, to prociaim liberty to captives and the opening of the prison to them that are bound."

In Nazareth. according to the story in the gospels, Jesus went into the synagogue and gave almost the same message St. Mathew records the words of Jesus as "Blessed are the poor in *spirit.*" while Luke records the same verse as "Blessed are the *poor*".

We are living today in an age when there is so much of reference and concern for the *poor*, meaning not merely those living below the poverty line but all those who are oppressed and unable to realise their potential as citizens in their own country.

The story of all civilisations is the story of the exploitation of the poor by the few who are rich. While both developed and developiing countries have registered giant strides in technological progress, never before have so many been so poor and so many so illiterate. It is to these exploited segments of our society that the Prophet Isaiah addresses the words "*Behold I do a new thing...... shall ye not known it*".

To see the local task in the total vision is the mission of the church today. Schools and hospitals have been established by the pioneer missionaries and handed over to us. But for whose benefit are they?

Are they only for an affluent segment of the population who can pay for their children to get an adequate educational knowledge for them to advance their prospects abroad. Or have these schools now to gear ourselves to the task of also liberating the *poor* through the

(*Continued on page 4*)

### New Director for the R. E. B.

At the 39th Annual Meeting the Jaffna Diocesan Council, Mr G. Rajanayagam was elected Director of the Religious Education Board of the Diocese. Mr. G. Rajanayagam is a teacher at Jaffna College. He is now at the Princeton Theological Seminary reading for his Masters Degree in Religious Education. He will assume work in June 1986.

### Felicitation to Mr. S. S. Selvadurai

The Jaffna Diocesan Council at its annual meeting in March felicitated its outgoing Treasurer Mr. S. S. Selvadurai. The farewell function took place in the Ottley Hall on Friday the 7th instant, at the end of the second days session Rt Rev. D. J. Ambalavanar who presided over the function said that Mr. S. S. Selvadurai was honest dependable and hardworking. He was a loyal churchman and continued to serve the church enthusiastically even after the take-over of schools in 1960. Rt. Rev. S Kulandran said that Mr. Selvadurai served him with unwavering loyalty when he was Bishop of the Diocese. Eventhough Mr. Selvadurai was lavish in spending his own money he was extreamely careful when dealing with the church treasury. Mrs. A. Viraspillai said that she admire the simple life of Mr. Selvadurai and that younger should follow his example.

Mr. S. Selvadurai thanked the Deocesan Council for organizing the farewell function and said that by serving the Diocese he was able to serve God to whom he owed so much in his life.

Mr. Noel Vimalendran B Sc. of the Tutorial Staff of Jaffna College succeeds Mr. Selvadurai as treasurer of the Diocese. He assumed duties on Monday the tenth of March.

### Bishop Hollis Passes Away

Rt. Rev. Michel Hollis the first Moderator of the C S. I. died in his home in U. K. on the 11th of February 1936 He was 86 years old at the time of his death.

### IN MEMORIAM

**Kandiah Elizabeth Nallammah**

Died 29th May 1970

FONDLY REMEMBERED AND SADLY MISSED

She walked in kindness all the while
Hiding her heart break with a smile
Helped me find faith hope and love
Winged many a prayer to God above
She held me closely as a child
To calm a fear or tame the wild
She let me go when it was time
She gently left me in my prime.

ARUL POORANAM.

அருள் வாக்கு

நல்லதைச் செய்ய ஒருவனுக்குத் தெரிந்திருந்தும் அவன் அதைச் செய்யாவிடில், அது பாவமாகும். — யாக்கோபு 4 : 17

உதயதாரகை

# திருமறைக் கல்விப் பணி

இன்று கிறிஸ்தவ சபையாரிற் பலர் தனித்தியங்கும் கிறிஸ்தவ குழுக்களில் சேருவதை நாம் காண்கிறோம் இவர்கள் எதற்காகத் தங்கள் தாய்ச்சபைகளை விட்டுப் பிரிகிறார்களென ஆராய்ந்தறிவது நமது கடமை. இத்தகைய பிரிவுகளுக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவற்றுள், முக்கியமாகக் கூறப்படுவது, நமது சபைகளில், முறையான திருமறைப் படிப்பு நடத்தப்படுவதில்லை என்பதே.

சபைகளைப் பிரிக்கும் இச்சிறு குழுக்கள், தமது தவருன சபைக் கொள்கைகளுக்கு ஆதாரமாக, வேத வசனங்களைப் பாவித்து, தவருன முறையில் திருமறையைப் படிப்பித்து வருகின்றனர். இதனைக் குறைகூறுவதில் மட்டும் திருப்தியடையாமல், சபைகள் ஒன்றுகூடி, முறையான திட்டத்தை வகுத்து, சபையாருக்கு ஏற்ற முறையில் கிறிஸ்தவ கொள்கைகளை விளக்கி, சிரமமாக திருமறையறிவை யூட்டுவதே நமது கடமை.

திருச்சபையின் முயற்சிகள் அனைத்திலும், திருமறையறிவு ஊட்டும் பணி மிக முக்கியமானது. இதன் மூலம், சபையாரின் உள்ளங்களில் உயிருள்ள விசுவாசம் உருவாகும். ஆகவே, இன்றைய சூழ்நிலைக்கேற்ற முறையில், கிறிஸ்தவ விசுவாசப் பயிற்சியை வழங்குவது அவசியம்.

திருச்சபை மக்கள் அனைவரும், கிறிஸ்தவ நற்செய்தியால் கவரப்பட்டு, அதன் ஆட்சிக்குட்பட்ட வாழ்க்கையை நடத்துவதற்கு ஏதுவாய் எடுத்தாளப்படும் பல்வகை முறைகளின் திரட்சியே திருமறைக்கல்வி முறையாகும். ஆகவே நமது சபைகள், தமது விசுவாசத்தைத் தெளிவாக அறிந்து, அதனைத் தமதாக்கிக் கொண்டு, சபையாரை முறையாக இவ் விசுவாசத்திற்குள் வளர்க்கும் பொறுப்பைக் குறைவின்றி நிறைவேற்ற வேண்டும்.

நம் நாட்டின் பண்டைய கலாச்சாரக் கருவூலத்தையும், புதிய கல்வி முறை உளவியல் ஆய்வுகளையும் இறைவனின் சேவைக்கு உட்படுத்தி அவை இயேசுபெருமானை ஏற்றிச் செல்லும் அரிய வாகனமாகக் கையாளப்படவேண்டும்.

திருமறைக் கல்வியென்பது, திருச்சபையால் அளிக்கப்படும் நேரடிப் போதனை மட்டுமல்ல, சபையின் ஆராதனை, ஞான அனுட்டானம் முதலியவற்றில் பங்கெடுத்தல், விசுவாசிகளின் கூட்டுறவு, சபையின் ஏனைய பணிகளில் பங்கெடுத்தல், சமுதாயத்தில் சுயநலமற்ற பணிபுரிதல் போன்றவற்றிற்கும் வேண்டிய பயிற்சியை இக் கல்வி முறை அளிக்க உதவுகின்றது.

எனவே, சபையார் அனைவரும் திருமறைக் கல்விப்பணியில் பங்கெடுத்தல் வேண்டும்: ஒவ்வொருவரும், தத்தம் வாழ்க்கையாலும் சாட்சியாலும், தம்மைச் சூழ்ந்துள்ள மக்கள் இறைவனை நாடி, அவருடன் இணைந்து, விசுவாசத்தில் வளர்ச்சி பெறவும், சமுதாயத்தில் விசுவாச வாழ்க்கையை நடத்தவும் உதவுவதே, திருமறைக் கல்விப் பணியில் பங்கெடுத்தலாகும்.

புதிய சூழ்நிலையில், புதிய அறைகூவல்கள் மத்தியில் திருமறைக் கல்வி அளிக்கும் பொறுப்பைப்பற்றி நன்கு ஆராய்ந்தறிவது நமது கடமை. கிறிஸ்தவ விசுவாசம் பழமையான தாயினும், அதில் புதுமை பொதிந்துள்ளது. ஆகவே, காலத்தின் மாறுதலுக்கேற்கப் புதிய முறைகளைக் கையாண்டு கிறிஸ்தவ விசுவாசம் உயிருள்ள விசுவாசம் என்பதை நிலைநாட்டி, விசுவாசத்தை பாதுகாக்க வேண்டிய இளம் சந்ததியாருக்கு, ஏற்ற முறையில் திருமறைக் கல்வியை வழங்கி, நமது திருச்சபைகளை, உயிர்புள்ள சபைகளாய் இயங்க வைப்பதில் நமது பங்கை அளிப்பது, நமக்களிக்கப்பட்ட மாபெரும் பொறுப்பாகும்.

செய்தி

## நயினதீவில் அட்டகாசம்

● பாதுகாப்புப் படையினர், கடந்த திங்கட்கிழமை (5-3-86) மாலை நயினதீவைச் சுற்றி வளைத்து நிகழ்த்திய வன்முறைச் சம்பவங்களினுல் நாகபூஷனி அம்மன் கோவிலிற்கு 20 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. தேநீர் நடத்துனராகக் கூறி வீடுகள், கடைகள், வள்ளங்கள் என்பன எரிக்கப்பட்டன.

செய்தித் திரட்டு

## பிரியாவிடை

● கடந்த 21 ஆண்டுகளுக்கு மேலாக தென் இந்திய திருச்சபை யாழ். மறைமாவட்டத்தின் பொருளாளராகப் பணியாற்றிய திரு. S. S. செல்வத்துரை அவர்களுக்கு நமது பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் இம்மாதம் 7 ஆம் திகதி பி. ப. 3-30 மணிக்கு வட்டுக்கோட்டை ஒட்லி மண்டபத்தில் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

இவ்வைபவம் வண. சாம் தம்பு அவர்களின் செபத்துடன் தொடங்கிற்று. முன்னாள் பேராயர் அருள்மிகு எஸ். குலேந்திரன், வண. J. J. இரத்தினராசா, திருமதி விராசிப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பேராயர் அம்பலவாணர் அவர்கள் தமது பாராட்டுரையை வழங்கி, யாழ் மறை மாவட்டத்தின் பெயரால் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். திரு செல்லத்துரை நன்றி கூறினார். அனைவருக்கும் தேநீர் விருந்துபசார நடத்தப்பட்டது

## பண்டத்தரிப்பு சிறுவர் இல்லம்

● பண்டத்தரிப்பிலுள்ள ஹரியட் உவின்சுலோ பெண்கள் இல்லத்திற்கு, ஒரு புதிய மூன்று மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இதன் கீழ்மாடி முடிவடைந்துள்ளது. இம்மண்டபத்தின் திறப்பு விழா, இம்மாதம், 6ஆம் திகதி, பண்டத்தரிப்பு சிறுவர் இல்லத்தில், பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா, வண, சாம் தம்பு அவர்களின் செபத்துடன் தொடங்கிற்று. பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. புலவர் வேல் முருகன், பண்டத்தரிப்பு மக்கள் சார்பில் வாழ்த்துரை வழங்கினர். திரு. A.R. கதிர்காமர், யாழ். மறைமாவட்ட பேரவையின் பெயரால் வாழ்த்துரை கூறினர். சிறுவர் இல்லங்களின் முகாமையாளர் திரு. S. இரத்தினவேல் நன்றியுரை வழங்கினர். பேராயர் அம்பலவாணர் அவர்கள் வாழ்த்துரை கூறி, ஆசீர்வாதங் கூறினர்.

இக்கட்டடம் குறுகிய காலத்திற்குள் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது அனைவரும் தேநீர் விருந்தில் கலந்து கொண்டனர்.

இல்லத்திற்கு இனியவை:

### நாற்காலிகள் அழுக்கடைந்தால் ?

1. வீட்டிலுள்ள பிரம்பு நாற்காலிகள் அழுக்கடைந்து இருக்கின்றன. எப்படி சுத்தப்படுத்த வேண்டும் தெரியுமா? வடி கஞ்சியில் துணியை நருகன்று தேய்த்துப் பாருங்கள், புத்தம் புதியனவாகிவிடும்.

### வெண்காயத்தை பாதுகாக்க :

2. சந்தையில் மலிவாயிருக்கிறதென அதிகமாக வெண்காயத்தை வாங்கிவிட்டீர்கள். ஆனால் நெடுநாள் இருக்காதே! அழுகிவிடுமே! என்று யோசிக்கிறீர்களா? அழுகாமல் இருக்க, அவற்றைக் கொத்துக் கொத்தாகக் கட்டித் தொங்கவிடுங்கள். அநேக நாட்கள் அப்படியே இருக்கும்.

தியானப்பகுதி :

## இரு கைதிகள்

தெய்வ பக்தியுள்ள ஒரு மனிதன், ஓர் அவசர வேலையின் நிமித்தம் நள்ளிரவில் மிகத் தூரமுள்ள ஓர் இடத்துற்குச் செல்ல வேண்டியிருந்தது. அவன் போகும்போது கள்வன் ஒருவன், பூட்டை உடைத்து ஒரு கடையைத் திறந்து கொண்டிருந்ததைக் கண்டான். உடனே அவனிடம் சென்று, 'பிறரது உடைமையை நீ அபகரித்து, நட்டம் விளைவிப்பது பெரிய பாவம்', என்று கூறினன். அதற்குக் கள்வன், 'நீ உயிருடன் போக விரும்பினுல், பேசாமல் போய்விடு. இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன்', என்று எச்சரித்தான். அந்த மனிதனே, பின் வாங்காமல் அந்தக் கள்வனேடு வாதாடினன். கள்வன் தன் ஆலோசனைக்கு இணங்காததைக் கண்டு, கூக்குரலிட்டு அயலகத்தாரைக் கூவி அழைத்தான்.

அவர்கள் கள்வனைப் பிடிக்க ஓடி வந்தனர், அந்த நல்ல மனிதன் கள்வனைக் குற்றம் சாட்ட அக்கள்வன் இந்த நல்ல மனிதன் மீது குற்றம் சாட்டினன், சாட்சியாக வேறெவரும் இல்லாததால், அவர்கள் இரண்டு பேரையும் சிறைப்படுத்தி ஓர் அறையில் அடைத்து வைத்தனர், காவல் அதிகாரியும், அவனேடு வேறு சிலரும், அவர்கள் பேசுவதைக் கேட்க மறைந்திருந்தனர்.

தன்னுடன் கைதியாக இருக்கும் அந்த நல்ல மனிதனைப் பார்த்து அக்கள்வன், 'உன்னை எப்படி மாட்டி வைத்தேன் பார்த்தாயா? நான் முதலிலேயே, உன்னைப்போய் விடு அல்லது துன்பப்படுவாய் என்று சொன்னேனே, இப்போது உன் உண்மையான நிலை, உன்னை எப்படிக் காப்பாற்றப் போகிறது பார்ப்போம்?, என்றுகூறினன்,

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தக் காவல் அதிகாரி, கதவைத் திறந்து அந்த நல்ல மனிதனை விடுதலை செய்து பயணத்திற்கு வேண்டிய பணமும் கொடுத்து அனுப்பி வைத்தான், கள்வனையோ நையப்புடைத்து சிறைச்சாலைக்குள் அடைத்து வைத்தான்.

"பொய்ச் சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை,"

— நீதி. 19 : 5

— [சாதுசுந்தர் சிங்]

செய்திகள்

## சிங்கர் நிறுவனம் ஆயுதங்கள் தயாரிப்பு?

● உலகப் பிரசித்தி பெற்ற "சிங்கர்" நிறுவனம் எவெக்ரேனிக் போர் ஆயுதங்கள் உற்பத்தி செய்யவுள்ளது. 135 ஆண்டுகள் சிங்கர் தையல் மெஷின் உட்பட பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்த நிறுவனமே, இவ்வாண்டு போர் ஆயுதங்களை உற்பத்தி செய்யவுள்ளது

## ஆயுத பலமூலம்

● ஆயுதபலம் மூலம் எமது நாட்டு இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இருந்தும் அரச ஊழியராக இருப்பதால் எனது கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது! என வவனியா மாவட்ட ஆயுதப்படைகளின் 2ம் தளபதி கேர்னல் ரஞ்சித் சில்வா சமீபத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 146 ] 14-3-86 [ இதழ் 11


## நீ சுகமடைய விரும்புகிருயா?

நாம் எப்போதும் சுகபெலத்துடன் வாழவே விரும்புகிறோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆனால், நாம் விரும்புவது போல் எப்போதும் சுகபெலத்துடன் வாழமுடியவில்லையே! ஏன்? சிந்தித்துப் பாருங்கள்!

நமது உடல், நோய்களுக்கும் துன்பங்களுக்கும் உறைவிடமா யிருக்கிறது. நோய், முதுமை, இறப்பு ஆகியன, நம்வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள். ஆயினும், இறைவனின் அன்பின் ஆட்சிக்குள் இருப்போருக்கு, எத்தகைய துன்பங்கள், நோய்கள் ஏற்படினும், அவற்றால் அவர்கள் அழிந்து போகாமல், அவரின் பாதுகாப்பு கிடைக்கும் என்று உறுதியாக நாம் நம்பலாம்.

அன்பரே, எல்லாம் வல்ல இறைவனின் அருளால்தான் நீர் சுகத்தையும் பெலத்தையும், மனச்சமாதானத்தையும் இவ்வுலகில் அனுபவித்து வருகிறீர். ஆம், இறைவனின் அளப்பரிய அருளி னால்த் தான் நீர் வாழ்கின்றீர் என்பதை மறவாதீர். ஆகவே உமக்குச் சுகவாழ்வு வேண்டுமேயானால், இறைவனை நம்பிக்கையுடன் வழிபட்டு, அவரோடு இணைந்து வாழ்வதே உன்தலையாய கடமை. இறைவனோடு இணைந்து வாழ்வோர், துன்பங்கள் தொல்லைகளிலிருந்து, நோய் நொடியின்றி பாதுகாக்கப்படுவது நிச்சயம்.

நீர், நோய்வாய்ப்பட்டிருக்கும் போது, உம்மை பாரமரிக்க மருத் துவர், மருத்துவ உதவியாளர், மருந்துகள் ஆகியவற்றை ஏற்ற முறையில் தந்துதவியவர், இறைவனே. நீர் சுகமாயிருக்கும்போதும், சுகவீனமாயிருக்கும் போதும் தன் அன்பின் கரத்தினால் உம்மை அரவணைத்து ஆதரித்து வந்தவர் இறைவனே. ஆகவே நீர் அவரில் முழு மனத்துடன் அன்பு செய்து வாழ்ந்தால், அவர் அன்புடன் அளிக்கும் சுகவாழ்வைப் பெற்று இன்பமாக வாழலாம்.

உமக்கு வரும் நோய்களுக்கும் துன்பங்களுக்கும் பல காரணங் களுண்டு. சிலர் சுகாதார விதிகளைக் கவனியாமல் வாழ்கின்றனர். சிலரின் உள்ளத்தில், வன்மம், குரோதம், வஞ்சகம், எரிச்சல், பகை, வெறுப்பு போன்ற பல தீய குணங்கள் குடிகொண்டுள்ளன. சிலர் நித்தம் தீய எண்ணங்களை எண்ணி, தீய செயல்களையே செய்து வரு கின்றனர். வேறு சிலர் இறைவழிபாட்டில் ஈடுபடாமல், அவர் திருப் போதனைகளுக்குச் செவிசாய்க்காமல், உலகமே தஞ்சமென வாழ் கின்றனர். இத்தகையோரே, பலவகையான நோய்களாலும் துன் பங்களினாலும் பிடிக்கப் படுகின்றனர். ஆகவே, உமக்கு வரும் நோய்களுக்கும், துன்பங்களுக்கும், நீரே பொறுப்பாளியாயிருக்கிறீர்.

ஆகவே, உமது உடல் சுகத்தையும், மன அமைதியையும் ஆன் மீக ஆற்றலையும் பெற விரும்பினால், முதலில் பரம தந்தையாகிய இறைவனிடம் உமது பாவங்கள் அனைத்தையும் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெறுவது அவசியம். இறைவனிடமிருந்து மன்னிப் பைப்பெற்று சுகவாழ்வை அடையும் வழியை, இறைவன் தாமே உமக்காக ஏற்படுத்தியுள்ளார். அது என்னதெரியுமா?

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், நம்மைப் பாவ அழிவிலிருந்து மீட்க, இறைவன் தமது திருமைந்தன் இயேசு பிரானை இவ்வுலகிற்கு அனுப்பினார். இயேசு பெருமான் இவ்வுல கில் வாழ்ந்த காலத்தில், நோயாளிகளைக் குணப்படுத்தி, கவலையுற் றோருக்கு ஆறுதல் அளித்து, நற்போதனைகளைப் போதித்து அனை வருக்கும் நன்மையேசெய்துவந்தார். நம்மைப் பாவத்திலிருந்தும் நோய்களிலிருந்தும் மீட்பதற்காகத் தம் உயிரை நமக்காகச் சிலு வையில் தியாகஞ்செய்தார்.

எம்பெருமான் மரித்த மூன்றாம் நாள், இறைவன் அவரை உயிரோடு எழுப்பினார். இன்றும் இயேசுபிரான் உயிரோடிருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவரைத் தம்மீட்ப ராக ஏற்றுக்கொள்வோருக்கு, இன்றும் இறைவன் சுகவாழ்வையும், நற்பேறுகளையும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். இதை நீர் பெற விரும்புகிறீரா? "கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும்," என்பது இயேசுபிரானின் வாக்காகும்.

நீர் இயேசுபிரானை அறிந்து, அவரை உறுதியாக நம்பி, உமது மீட்பராக ஏற்றுக் கொள்ளும் போது, அவர் உமது பாவங் களை மன்னித்து, உமது நோய்களைக் குணமாக்கி, உமக்கு மன அமைதியையும், உடல் நலத்தையும் ஆன்மீக ஆற்றலையும் அன்புடன் அருளுவார்.

இயேசு பெருமானை உறுதியாகப் பற்றிக் கொண்டிருப்போர் இவ்வுலகிலேயே பேரின்ப வாழ்வைப் பெற்று நல்வாழ்வு நல்வாழ்வு வாழ முடியும். மறுமையிலும் இப்புதியவாழ்வைத் தொடர்ந்து வாழ்வார்கள். இதுவே அவர்களுக்கருளப்படும் மோட்ச வாழ்வு.

ஆகவே, உன் நோய்களை, உன் கவலைகளை நினைந்து கலங்க வேண்டாம்:

> "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"

என்று இயேசு உம்மை அன்புடன் அழைக்கிறார். அஞ்சாமல் நம்பிக் கையுடன் அண்ணல் இயேசுவின் திருப்பாதங்களண்டை தயங்காமல் வா, அவர் உன் அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பார், பாவ அழுக்கை நீக்கி அருள் செய்வார். உன் நோய்களை நீக்கி சுகம் அளிப்பார். நீ நோயினால் வாடி வதங்குவது இறைவனுக்கு விருப் பமில்லை. நீ எவ்வித கவலையுமற்று நல்ல சுகத்துடன் வாழ்வதையே அவர்விரும்புகிறார். துன்பங்கள் உன்னைத் தாக்கும்போது, இது என் 'விதி' யெனக் கூறிச் சோர்ந்து போகவேண்டாம். "விதி" யைத் தம் ஆற்றலால் இயேசு பெருமான் மேற்கொள்வார்.

ஆகவே, உன் உடலில் நோய்கள் நீங்க, துன்பங்கள் அகல இயேசு பெருமானை நாடி வா. 'இயேசு பெருமானே, நீர் இது வரை எனக்களித்த நன்மைகளுக்காக உமக்கு நன்றி ஐயா, என் பாவங்களை மன்னியும், என் நோய்களைக் குணமாக்கி, எனக்குச் சுகவாழ்வைத் தாரும். நீர்என்னைக் கைவிடமாட்டீர் என உறுதியாக நம்புகிறேன "என்று வேண்டுதல செய்யுங்கள். என்னிடம வருகிற வனை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன" என்று உறுதியளித்தார் இயேசு பெருமான் ஆகவே, கவலைப் படாதே, இயேசு சுவாமி உன நோய்களை அகற்றி, உன்னைப பாவக்கட்டுகளிலிருந்து விடுவித்து, உன்னை தம் அன்பின் கரங்களினால் பெலப்படுத்துவார்.

[மானிப்பாய் நற்தூதுப் பணிமன்ற வெளியீடு – 1.]

---

<u>தியானம்</u>

### உயிர்த்தெழுந்த திருநாள்

"இயேசுவின் உயிர்த்தெழல் பெருநிகழ்ச்சி
அவர் நேசரின் வாழ்விலும்
வரும்நிகழ்ச்சி"

என்று ஒரு தமிழ்ப்புலவன் பாடி னான். ஆம் இயேசுவின் உயிர்த் தெழல் பெருநிகழ்ச்சிதான்.

இயேசுவின் உயிர்த்தெழலை பலர் நம்ப மறுக்கின்றார்கள். சதுசேயர் உயிர்த்தெழலை இல்லை என்று கூறுகின்ற னர். ஆண்டவருடைய சீடர் களில் ஒருவனான தோமா என்ப வனும் இயேசுவின் உயிர்த் தெழலை நம்ப மறுத்தான். இயேசு தமது காயப்பட்ட கரங் களையும் விலாவையும் அவனுக் குக் காட்டியபொழுது அவன் விசுவாசித்தான். அப்பொழுது இயேசு அவனைப் பார்த்து தோமாவே "நீ கண்டு விசுவா சிக்கின்றாய் காணாமல் விசுவாசிக் கின்றவர்கள் பாக்கியவான்கள்" என்றார்.

நாம் காணாமல் விசுவாசிப் பவர்களாய் இருக்கவேண்டும். கண்டு விசுவாசிப்பது சுலபம். சிலர் தமக்குச் சுகம், செல்வம், மதிப்பு என்பன இருக்கும் பொழுது இறைவனை விசுவாசிக் கின்றார்கள். தமக்குத் துன்பம் ஏற்பட்டுவிட்டால் விசுவாசத்தை விட்டு விடுகின்றார்கள். துன்பங் கள் ஏற்படும் பொழுதும், தோல்விகள் ஏற்படும்பொழுதும விசுவாசித்திருப்பதே சலாக்கியம்.

பவுல் அப்போஸ்தலன் "காணப்படுபவைகள் அநித்திய மானவை காணப்படாதவை களோ நித்தியமானவை" என்று எழுதினார். காணப்படுபவைகளா வன சரீரம், செல்வம், வீடு, வாகனங்கள் என்பனவாகும் காணப்படாதவைகளாவன ஆன்மா, கிருபை, இரட்சிப்பு, மோட்சம், ஆனந்தம் முதலியன வாகும். காணப்படாதவைக ளுக்கு அழிவில்லை.

இயேசுவின் உயிர்த்தெழுதலை இல்லையென்றால் எங்கள் பிரசங்க மும் விருதா, உங்கள் விசுவாச மும் விருதா என்று பவுல் அப் போஸ்தலன் கூறினார். இயேசு வின் உயிர்த்தெழுதலே நமது விசுவாசத்தின் ஆணிவேர்.

— கீதா

---

<u>செய்திகள்:</u>

### திரு. டபிள்யூ. தஹநாயக்கா மந்திரியானர்

காலி எம். பி. திரு. டபிள்யூ. தஹநாயக்கா, கூட்டுறவுத்துறை அமைச்சராக 4-3-85 இல், ஜனாதி பதி முன்னிலையில் பதவிப் பிர மாணம் செய்து கொண்டார்.

### புற்றுநோய் ஆய்வு நிலையம்

● மார்பகப் புற்று நோயைக் கண்டுபிடிக்கும் அதிநவீன நிலை யம் புதுடில்லியில் அமைக்கப் பட்டுள்ளது. இதற்கான மருந்து கள் இந்தியாவிலுள்ள அணுசக்தி விஞ்ஞான ஆய்வு நிறுவன உதவி யுடன் பெறப்படுமெனத் தெரி கிறது.

### பலாலி ஆசிரிய கலாசாலை

● பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மார்ச் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு இடம் மாற்ற யாழ். கல்விப் பணிப்பா ளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

### யாழ். மறைமாவட்டப் பேரவைக் கூட்டங்கள்

● நமது மறை மாவட்டத்தின் பேரவைக் கூட்டங்கள், கடந்த வாரம் 6 ஆம், 7 ஆம, 8 ஆம் திகதிகளில், வட்டுக்கோட்டை யில், நமது பேராயர் அருள்மிகு, டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. இப் பேரவையில், மறைமாவட்டத் தின், செயலாளராக வண. சாம் தம்பு தேர்ந்தெடுக்கப் பட்டார். திரு. தோவெல் விபுலேந்திரன் 1986 ஆம் ஆண்டின் பொருளாள ராக நியமிக்கப் பட்டார்.

*EDITORIAL*

## A Cromwellian Fate

The history of "the little wars of Asia" is replete with the tales of many tragic heroes, the latest being that of Ferdinand Marcos of the Philippines and his wife Imelda Marcos, derisively referred to, as the "Iron butterfly" by her critics.

Driven almost by a mystical sense of destiny, they sent a nation of 50 million people (scattered over 7100 islands) on a forced march to a *New Society*, gathering in four hands, every significant lever of power in the country.

Last month, Ferdinand and Imelda fell from power not merely because of their excesses 'in deed and aspiration' but more fundamentally because of the failure of their two-pronged approach of 'strength and love' to recover the economic losses caused by the insurgents.

To persuade the *Moros* to come to Manila for an "emotional disarmament", (laying down of arms and obtaining an amnesty, at an official ceremony at the Palace at which Marcos himself ceremoniously officiated), a special battalion of Philippine troops were operated in Mindanao, under the motto "*Armor Con Amor*" (*Strong Arms and Love*).

Set against the standards of his own rhubarb and rhetoric, the President's interpretation of his dreams provided a yawning gap in realities which the peasants in the countryside — the cane-cutters and the factory hands — felt more intensively than the middle class and affluent people in the town.

Along with growth, came the familiar third world syndrome of a decline in living standards of the people. (The Philippines has the largest birth rate in South East Asia, the population increasing at 2.4 per cent every year). Imelda Marcos's beautification schemes and re-settlement camps were inhumanly cosmetic, according to the poorer segment of the people. They (the schemes) were designed for "foreigners and tourists to enjoy".

The ending of the nine year-old martial law, did not usher in the *New Society* nor restore the country to anything resembling democracy. There was no release of political prisoners, no curb in his power to legislate by fiat or to order summary arrest. The government retained for all purposes "a government by decree".

About the ties which bound his country to US which Marcos ponderously referred to as a "blood pact", it was common knowlege that the "pact" referred to, were the two US military bases in the country — *the Clark Air Force Base and the Subic Bay Naval station* both constituting the corner stone of America's Pacific Defense.

But Vice President Mondale visiting Philippines as early as 1978 had expressed dissatisfaction and concern over Marcos's heavy-handed martial-law regime. Asked in an interview if he (Mondale) had advised Marcos to improve his position on human rights, the reply the Vice-President gave was that Marcos "*has some perceptions on human rights we couldn't accept*".

As the curtain rang down last month on Marcos's tragic hold on power, President Reagan, unable any longer to play his cards close to his vest, had to send his special envoy to the Philippines to explore the potentially explosive situation after the elections on February 7 (a numerical figure which Marcos thought would, according to his stars, bring him luck).

But even his 'Stars' failed him and Philip Habib, the special envoy, reported back that "*the polling was so marked by fraud and violence that the credibility of Marcos's victory claim was questionable*".

"*The truth will prevail in the end*" said Pandit Jawaharlal Nehru "*although the lie has sometimes a long start*".

## India and the Sri Lankan Crisis

There has been a thickening of the ice in the relations between India and Sri Lanka in recent weeks. Two Indian statesmen have expressed strong sentiments, one in the Indian Parliament on the atrocities and civilian killings in Sri Lanka, and the other, (in an appropriate forum in Geneva) on the violation of human rights also in Sri Lanka.

A feverish shuttle between India and Sri Lanka of the respective High Commissioners — Jyotindra Nath Dixit and Bernard Tillakaratne taking with them 'letters' and replies' was an unmistakeable symptom of the new chill in relations between the two neighbouring states

National Security Minister's recent statement that he is prepared to stop aerial blitz on a reciprocal gesture from the resistance groups that they would not use Indian bases as a conduit for arms, under-scores an important development in the Sri Lankan political scene.

The worst of all options (Colombo now appears to realise) is a dead lock or inactivity. It eventually leads to radicalisation which in Sri Lanka affects not merely the civilians of the North and East but also those in other parts of the country.

As opposition leader Anura Bandaranayake has pointed out, there was a time when Sinhalese were able to travel from Pt. Pedro to Devenuwara without fear for their personal security. But today they are unable to venture out even to Anuradhapura or to Adam's Peak. The whole country is in a state of war. As for the Tamils getting out of their homes is a major risk.

A weak and crisis-racked Sri Lanka is not in anyone's interest. But above all, the money poured on arms in a country which according to Finance Minister Ronnie de Mel has a foreign debt of "a little over US dollars 2 billion" (CDN 8-3-86) has further muddled the picture.

"*Short views we take, nor see the lengths behind*" said Alexander Pope, the English Poet. "The following extract which we have culled from the *Sunday Observer* of 9-3-86 of a statement made by India on the contemporary political trends in Ceylon is an indication of "the lengths behind", our policy of "*Arms and Parley*" without a serious effort to sow the seeds of 'parley':—

> "The Sri Lankan military action and the statements of its leaders appear to belie its assertions that it is seeking the assistance of the Indian government to resolve the problem."

Reason is a small voice but it is persistent. Let us not anymore nurse the vage illusion that miltary solution will achieve any desired goal in Sri Lanka. Philippines has taught the lesson that in every area of human existence, the wheel turns

### Tamils in Tokyo celebrate Christmas and Thai Pongal

A Christmas service in Tamil was held in the home of Mr. and Mrs. Silan Kadirgamar in Tokyo on Christmas day 1985. About 15 Tamils both Christians and Hindus joined in the service and fellowship lunch that followed. Tamil Christmas hymns and lyrics were sung. The Bible lessons were read by Mr. K. Kabilamany. The prayers of intercession according to the CSI Litany were led by Mr. Charles Jeeva. The Jeyaseelan family sang a special song. A short meditation for the day was presented by Silan Kadirgamar. A similar service was held on Christmas day 1984 in the home of Charles and Somina Jeeva.

On 19th January the first non-working day after Thai Pongal a larger group of Tamils, this time including Indian Tamils met in the home of Mr. and Mrs. Jeyaseelan in the Kawasaki Prefecture, about an hours commuting distance from Tokyo. Thai Pongal was celebrated in the traditional way. Prayers were said according to both Hindu and Christian traditions. Traditional Thai Pongal food was served, followed by lunch. Mrs. Manonmani Sanmugadas gave a short talk in Tamil on the significance of Thai Pongl. Most of those present on both occasions were young men working for post-graduate doctorate degrees in engineering and various fields of technology in well known Universities in Tokyo including Japan's most prestigious University of Tokyo and the Tokyo University of Technology. It was heartening to see the wealth of talent available within the Tamil community, especially among young people on both sides of the Palk Strait.

Mr. Ravi Kumar speaking on behalf of the Indian Tamils present summed up the mood when he made a passionate appeal to those present that they should eventually return to the 'homeland' to serve country and people there.

### Bishop's Charge

(*Continued from page 1*)

educational facilities afforded to them.

For whom have the mission hospitals been established? Are they only for an affluent segment who can pay for their specialised treatment? Or have they also been established to cater to the poorer segment of their society to liberate them from shackles of disease and malnutrition, although they may not be able to meet the entire cost of such medical care

These are the challenges which we as a Diocese, are trying to meet today with all the resources we could get. Our work, south of Elephant pass during the last few years has given us a rich experience, in the field of liberating the poor. Times of great adversity we have found, have been our great moments of opportunity. When we had taken one step and about to relax, we found that God had shown us another step to be taken.

It was U. S. President, Woodrow Wilson who once said "*All things come to him who knows what he is waiting for.*

We are familiar with the expressions, the *Church Militant* and the *Church Triumphant*. We have now to be partners in realesing the vision of the *Church Expectant*.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/29/News/85.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 14th March 1986 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.